**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, அரக்கோணம்.**

முன்னிலை: **செல்வி.அ.அமீனா, B.B.A., L.L.B (Hons).,**

**நீதித்துறை நடுவர் எண். 1 (மு.கூ.பொ),**

2026ம் ஆண்டு ஜீன் 19ம் நாள் வெள்ளிகிழமை

**C.C.No.71/2025**

**(CNR.No.TNRP09-001124-2025)**

அரசுக்காக,
உதவி ஆய்வாளர்,
அரக்கோணம் கிராமிய காவல் நிலையம்,
குற்ற எண்.15/2016. ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. கிருஷ்ணன், வயது–52,
(இறந்துவிட்டார்)
த/பெ. சுப்பன்,
கிழாண்ட தெரு,
ஆணைப்பாக்கம்,
அரக்கோணம் தாலுக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம்.

2. வேலு, வயது–39,
(இறந்துவிட்டார்)
த/பெ. கிருஷ்ணன்,
கிழாண்ட தெரு,
ஆணைப்பாக்கம்,
அரக்கோணம் தாலுக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம்.

3. வெங்கடேசன், வயது–28,
த/பெ. கிருஷ்ணன்,
கிழாண்ட தெரு,
ஆணைப்பாக்கம்,
அரக்கோணம் தாலுக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம்.

... எதிரிகள்

இவ்வழக்கு 24.04.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 19.06.2026ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ம. யோகராஜ் அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

(இவ்வழக்கின் 1வது, 2வது எதிரிகள் இறந்துவிட்டதால் 29.07.2025 ம் தேதி உத்தரவின் படி சார்ஜ் அபேட் செய்யப்பட்டுள்ளனர்)

10.01.2016ம் தேதி இரவு 7 மணி அளவில் அரக்கோணம் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஆணைப்பாளையம் கிராமத்தில் சாட்சி 1 விஜயகுமார், சாட்சி 2 ஜெயந்தி ஆகியோர் சாட்சி 1ன் வீட்டிடம்

இருந்தபோது, வீட்டுமனை பிரச்சனையில் இருந்த முன்விரோதம் காரணமாக, நீர் புகார்தாரர் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டு தெவிடியா பையா, தெவிடியா என்று அசிங்கமாக பேசி, சாட்சிகளை அடித்ததாக இதச பிரிவு 294(b), 323, 324, 506(ii)ன் கீழ் அரசு தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் அனைத்து நகல்களும் எதிரிக்கு குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 323 கீழ் முதல் நோக்கு தோன்றியதால் குவிமுச பிரிவு 240–ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்தார். எதிரி குற்றத்தினை மறுத்தமையால் குவிமுச பிரிவு 242–ன் படி அரசு தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4. **<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் விவரம் பின்வருமாறு</u>**:–

அரசுதரப்பில் பட்டியல் சாட்சி–1 முதல் பட்டியல் சாட்சி–8 வரை சாட்சிகள் கொடுக்கப்பட்டு பட்டியல் சாட்சி–3, பட்டியல் சாட்சி–7 மற்றும் பட்டியல் சாட்சி–8 வரையிலானவர்கள் விசாரிக்காமல்

விட்டொழிக்கப்பட்டு, கூடுதல் சாட்சியாக தலைமை காவலர் ராஜேஷ் பட்டியல் சாட்சி–9 ஆக சேர்க்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா6 வரை விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்</u>**:–

(i) 10.01.2016ம் தேதி இரவு 7 மணி அளவில் அரக்கோணம் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஆணைப்பாளையம் கிராமத்தில் சாட்சி 1 விஜயகுமார், சாட்சி 2 ஜெயந்தி ஆகியோர் சாட்சி 1ன் வீட்டிடம் இருந்தபோது, வீட்டுமனை பிரச்சனையில் இருந்த முன்விரோதம் காரணமாக, நீர் புகார்தாரர் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டு தெவிடியா பையா, தெவிடியா என்று அசிங்கமாக பேசி, சாட்சியை அடித்தார். அ.சா.2 ஜெயந்தி சம்பவத்தை நேரில் பார்த்தார்.

(ii) சம்பவத்தில் காயமுற்ற பட்டியல் .அ.சா.1 விஜயகுமார் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். அங்கு பணியில் இருந்த மருத்துவர் பட்டியல் சாட்சி–7 சங்கர் அ.சா.1 சிகிச்சை அளித்தார்.

(iii) பின்னர் 11.01.2016ம் தேதியன்று பட்டியல் சாட்சி–8 உதவி ஆய்வாளர் ரங்கநாதன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது அரக்கோணம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின்

பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த புகார்தாரர் விஜயகுமார் என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.4 புகார் வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலையம் அஜராகி அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.15/2016 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(1)ன் கீழ் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். புகார் வாக்குமூலத்தில் உள்ள புகார்தாரர் விஜயகுமார் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) பிறகு வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு பட்டியல் சாட்சி–8 உதவி ஆய்வாளர் ரங்கநாதன் 11.01.2016ம் தேதி மாலை 5 மணிக்கு சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சி–3 ராஜேந்திரன் மற்றும் பட்டியல் சாட்சி–6 முனுசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.7 பார்வை மகஜர் தயார் செய்தார்.

(v) பிறகு பட்டியல் சாட்சி 1 முதல் 6 வரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவரவே இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் 1வது எதிரியான கிருஷ்ணனை அன்றைய தினமே மாலை5 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இவ்வழக்கின் மற்ற எதிரிகள் நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் கைது நடவடிக்கை எதுவும் இல்லை.

(vii) பிறகு பட்டியல் சாட்சி–7 மருத்துவர் சங்கரை விசாரணை செய்து அ.சா.1 விஜயகுமாருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.2 ஜெயந்திக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என அ.சா.ஆ.7 என விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார். பிறகு இவ்வழக்கின் சட்ட பிரிவுகளான இதச 294(பி), 323, 324, 506(1)யை 294(பி), 323, 324, 506(2) என அ.சா.ஆ 10 பிரிவு மாற்றல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

(viii) பின்னர் விசாரணையில் எதிரி மீது முதல் நோக்கு தோன்றியதால், பட்டியல் சாட்சி–8 காவல் உதவி ஆய்வாளர் ரங்கநாதன் விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(b) கீழ் வினவிய போது சாட்சிகள் கூறுவது பொய் என்றும் பொய் வழக்கு என்றும் தெரிவித்தார். மேலும் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம்</u>**:–

எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ?

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

9. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. குற்றவியல் வழக்குகளில் நிரூபிக்கும் சுமையானது அரசு தரப்பினை சார்ந்துள்ளது என்று இசாச சட்டப்பிரிவு 101 இன் கீழ் காணப்படுகிறது.

11. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசுதரப்பில், விஜயகுமார் அ.சா.1 ஆகவும், ஜெயந்தி அ.சா.2 ஆகவும், ராமு அ.சா.3 ஆகவும், ராஜேந்திரன் அ.சா.4 ஆகவும், முனுசாமி அ.சா.5ஆகவும் மற்றும் தலைமை காவலர் ராஜேஷ் அ.சா.6 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, புகார் வாக்குமூலத்தில் உள்ள புகார்தாரர்

விஜயகுமார் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும், பார்வை மகஜரில் உள்ள அ.சா.5ன் இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும், அ.சா.1 விஜயகுமார் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 ஆகவும், அ.சா.2 ஜெயந்தி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகவும், பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறிப்பிடவில்லை.

12. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 விஜயகுமார் தனது முதன்மை சாட்சியத்தில் "தான் ஆணைப்பாக்கத்தில் வசித்து வருவதாகவும், 2016ம் ஆண்டு இரவு 7 மணிக்கு தான் தனது வீட்டிடம் இருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் தன்னை தாக்கினார்கள், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்தேன். தற்போது எனக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க எந்த ஆட்சேபேனையும் இல்லை" என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 விஜயகுமார் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் எந்த சாட்சியமும்

அளிக்கவில்லை. இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2 ஜெயந்தி தனது முதன்மை சாட்சியத்தில் "தான் ஆணைப்பாக்கத்தில் வசித்து வருவதாகவும், 2016ம் ஆண்டு இரவு 7 மணிக்கு தனது அண்ணன் வீட்டிடம் இருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் தனது அண்ணனை தாக்கினார்கள், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்தேன். தற்போது எனக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க எந்த ஆட்சேபேணையும் இல்லை" என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 விஜயகுமார் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

14. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான அ.சா.3 ராமு தனது முதன்மை சாட்சியத்தில் "தான் ஆணைப்பாக்கத்தில் வசித்து வருவதாகவும், அ.சா.1 விஜயகுமார் தனது மைத்துனர் என்றும் அ.சா.2 ஜெயந்தி தனது மனைவி என்றும் 2016ம் ஆண்டு இரவு 7 மணிக்கு தனது மைத்துனர் வீட்டிடம் இருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் தனது மைத்துனரை தாக்கினார்கள், சந்தேகத்தின் பேரில்

எதிரிகள் மீது புகார் அளித்தோம். தற்போது எனக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க எந்த ஆட்சேபேனையும் இல்லை" என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 விஜயகுமார் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

15. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான அ.சா.4 ராஜேந்திரன் தனது முதன்மை சாட்சியத்தில் " தான் ஆணைப்பாக்கத்தில் வசித்து வருவதாகவும், பத்து ஆண்டுகளுக்கு முன்பு தேதி, மாதம், ஞாபகமில்லை. எங்க ஊரில் நடந்த தகராறு சம்மந்தமாக அரக்கோணம் கிராமிய போலீசார் வந்து தன்னை விசாரணை செய்தார்கள். அதற்கு சாட்சியாக இருக்கும்படி என்னை கேட்டுக் கொண்டதன் பேரில் தான் கையொப்பம் செய்ததாக" என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 ராஜேந்திரன் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

16.அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான அ.சா.5 முனுசாமி தனது முதன்மை சாட்சியத்தில் " தான் ஆணைப்பாக்கத்தில் வசித்து

வருவதாகவும், பத்து ஆண்டுகளுக்கு முன்பு தேதி, மாதம், ஞாபகமில்லை. தனது ஊரில் உள்ள விஜயகுமார் என்பவருக்கும், கிருஷ்ணன், வேலு, வெங்கடேசன் ஆகியயோருக்கு இடையே நடந்த தகராறு சம்மந்தமாக அரக்கோணம் கிராமிய போலீசார் வந்து தன்னை விசாரணை செய்தார்கள். அதற்கு சாட்சியாக இருக்கும்படி என்னை கேட்டுக் கொண்டதன் பேரில் தான் கையொப்பம் செய்ததாக" என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 முனுசாமி எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

17. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் தலைமை காவலர் அ.சா.6 சாட்சியத்தை மட்டுமே வைத்துக் கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாக கருத முடியாது.

18. இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஆராய்ந்து நோக்குமிடத்து இந்த வழக்கில் அரசு தரப்பால் விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிராகவும், எதிரிகள் அசிங்கமாக பேசி தாக்கியதாக அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காததாலும், மேலும் அ.சா.2 முதல் அ.சா.5 வரை

வழக்கின் புகாருக்கோ அல்லது குற்ற இறுதி அறிக்கைக்கோ ஒத்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதாலும், தலைமை காவலர் அ.சா.6 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளதால் அவரின் சாட்சியத்தினை மட்டும் வைத்துக் கொண்டு எதிரி குற்றம் புரிந்ததாக கருத இயலாது என்பதாலும், அரசு தரப்பு வழக்கினை உறுதியூட்டும் வகையில் சாட்சிகள் இல்லாததாலும், எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சியம், சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, மேற்சொன்ன காரணங்களால் எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 323 ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியம், சான்றாவனங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி குற்றவாளி இல்லை என்று குவிமுச பிரிவு 248(1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சொத்துக்கள் பற்றிய உத்தரவு எதுவும் பறிப்பிக்கப்படவில்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணையம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க தட்டச்சருக்கு உடனுக்குடன் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜீன் 19ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC),
அரக்கோணம்.

**இணைப்பு**:

1. **அரசுதரப்பு சாட்சிகள் பட்டியல்**:

| | |
|---|---|
| அ.சா.1 | விஜயகுமார். |
| அ.சா.2 | ஜெயந்தி. |
| அ.சா.3 | ராமு. |
| அ.சா.4 | ராஜேந்திரன். |
| அ.சா.5 | முனுசாமி. |
| அ.சா.6 | ராஜேஷ் (தலைமை காவலர்). |

2. **அரசுதரப்பு சான்றாவணங்கள் பட்டியல்**:

| Exhibits | Date | Description of Documents |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11.01.2016 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 விஜயகுமாரின் கையொப்பம். |
| அ.சா.ஆ.2 | 11.01.2016 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் முதலாவது கையொப்பம். |
| அ.சா.ஆ.3 | 11.01.2016 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.5ன் இரண்டாவது கையொப்பம். |
| அ.சா.ஆ.4 | 11.01.2016 | புகார் வாக்குமூலம். |
| அ.சா.ஆ.5 | 11.01.2016 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.6 | 11.01.2016 | மாதிரி வரைபடம். |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.7 | 11.01.2016 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.8 | 10.01.2016 | அ.சா.1 விஜயகுமார் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. |
| அ.சா.ஆ.9 | 10.01.2016 | அ.சா.2 ஜெயந்தி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. |
| அ.சா.ஆ.10 | 24.02.2016 | பிரிவு மாறுதல் அறிக்கை |

3. **அரசுதரப்பில் சான்று பொருள்**:- இந்த வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. **எதிரிகள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள், சான்று பொருள்:-** இல்லை.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC) ,
அரக்கோணம்.

**<u>நகல்கள்:-</u>**

1.மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், இராணிப்பேட்டை மாவட்டம்.

2.அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2.

3.காவல் ஆய்வாளர், அரக்கோணம் கிராமிய காவல் நிலையம்.

**குறிப்பு:-**

1. அரசுதரப்பில் சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.
2. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்தார்கள்.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC) ,
அரக்கோணம்.